முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு)
ஸ்ரீவில்லிபுத்தூர்.
**C.O.S**.No. 2/2023

2025-ம் ஆண்டு ஜீலை மாதம் 21-ம் நாள் வாதியின் சாட்சிய வாக்குமூலம். 1969-ம் வருடத்திய சாட்சிய சட்டம் பிரிவு 5-ன் ஏற்பாட்டின்படி திருமதி.தமிழ்செல்வி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.வெள்ளைப்பாண்டியன் | ஜாதி | : |
| த.பெ / க.பெ | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| தாலுகா | : | வயது | : |

21.07.2025

P.W.3

முதல் விசாரணை

நான் டி.வி.எல்.எஸ் டிரான்ஸ்போர்ட் நிறுவனம், சிவகாசி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது தலைமை அலுவலகம் சாத்தூரில் உள்ளது. டி.வி.எல்.எஸ் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் கோவில்பட்டி, ராஜபாளையம், சாத்தூர், மதுரை, விருதுநகர், சிவகாசி, பெங்களுர், மும்பை ஆகிய இடங்களுக்கு சரக்குகளை கொண்டு செல்லப்படும். வாதி நிறுவனம் மீனாட்சி டிரேடர்ஸ் பற்றி எனக்கு தெரியும். பிரதிவாதி நிறுவனம் ஸ்டேன்டர்டு மேச் இன்டஸ்ட்ரிஸ் மற்றும் அதன் துணை நிறுவனமான இந்து மேச் நிறுவனத்தையும் எனக்கு தெரியும். பிரதிவாதி நிறுவனத்திற்கு வாதி நிறுவனம் மூலம் நாங்கள் அந்த பொருட்களை சப்ளை செய்வோம் என்றால் சரிதான். அது எந்த நிறுவனத்திலிருந்து சரக்குகள் வருகிறது என்றால் மும்பையில் உள்ள ஜெய்தீப் ஏஜென்சிஸ் மூலம் வருகிறது. மேற்படி நிறுவனத்திலிருந்து நாங்கள் கொண்டுவரும் சரக்குகளை வாதி நிறுவனத்திற்கு தகவல் கூறி வாதி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி பிரதிவாதி நிறுவனத்தில் இறக்கிவிடுவோம். மேற்படி போக்குவரத்திற்கான கட்டணத்தை வாதி நிறுவனத்திடமிருந்து காசோலை மற்றும் வங்கி பரிவர்த்தனை மூலம் பெற்றுக் கொள்வோம். எந்தெந்த தேதியில் பணம்

பெற்றுள்ளோம் என்பதற்கு வாதி நிறுவனத்திற்குரிய எங்கள் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் லெட்சர் பதிவில் உள்ள 11.08.2021, 15.09.2021, 11.10.2021 ஆகிய தேதிகளில் வாதி நிறுவனத்திலிருந்து தொகை பெற்றது குறிப்பிடப்பட்டுள்ளது. அது வா.சா.ஆ.20 ஆகும். பிரதிவாதி நிறுவனத்திற்கு, வாதி நிறுவனத்தின் மூலம் அல்லாமல் வேறு நிறுவனங்களிலிருந்து சரக்குகள் எங்கள் நிறுவனம் மூலம் சரக்குகள் வந்து கொண்டிருக்கிறது. அது தொடர்பாக 11.07.2025 ம் தேதியன்று மேற்படி ஜெய்தீப் ஏஜென்சியிலிருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கு சரக்குகள் நேரடியாக வந்துள்ளது என்பதை காட்டக்கூடிய எங்கள் நிறுவனத்தின் எல்.ஆர். ரசீது எண்.12830. அது வா.சா.ஆ.21 ஆகும். (அது ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது).

**குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**